பாலசமுத்திரம்புதூர் ஊராட்சி மன்றத் தலைவர்/ செயல் அலுவலர் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை திருமதி. து.வேலுமணி

திருப்பூர் மாவட்டம் பாலசமுத்திரம் புதூர் ஊராட்சி காங்கயம் வட்டாரம்

ந.க.எண்: 01/2024.25 **நாள் : 08.04.2024**

பொருள்: மனைப்பிரிவு அங்கீகாரம் - ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை - காங்கேயம் ஊராட்சி ஒன்றியம், பாலசமுத்திரம்புதூர் ஊராட்சி மற்றும் கத்தாங்கன்னி கிராமம் க.ச.எண் : 28/2-ல் 3.19 ஏக்கர் பரப்பளவில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு தொழில் நுட்ப ஒப்புதல் வரப்பெற்றது - மனைப்பிரிவிற்கு அங்கீகாரம் மற்றும் இறுதி ஒப்புதல் வழங்குதல் - தொடர்பாக.

பார்வை:

1. அரசாணை எண்:71 ஊரக வளர்ச்சி துறை நாள்:16.06.2003
2. அரசாணை எண் : 79 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நவ4(3) நாள் : 04.05.2017.
3. அரசாணை எண்:18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்: 04.02.2019.
4. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அலுவலகம், திருப்பூர் மண்டலம் அவர்களின் செயல்முறை நடவடிக்கை ந.க.எண். 8EDF0NBZ/2023/TCP நாள்: 25.08.2023.
5. திரு.லோகநாதன், நெ.76, பழனியம்மாள் நகர், 3வது வீதி, நல்லூர், திருப்பூர்-641606 என்பவரது இணையதள விண்ணப்ப நாள் : 10.07.2023.

உத்தரவு:

காங்கேயம் ஊராட்சி ஒன்றியம், பாலசமுத்திரம்புதூர் ஊராட்சி மற்றும் கத்தாங்கன்னி கிராமம் க.ச.எண் : 28/2-ல் 3.19 ஏக்கர பரப்பளவில் அமையும் உத்தேச மனைபிரிவிற்கு பார்வை 4-ல் காணும் நகர் ஊரமைப்பு துறை உதவி இயக்குநர், திருப்பூர் அவர்களின் நடவடிக்கையில் தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட உத்தேச மனைப்பிரிவிற்கு SWP/DTCP/TIRUPPUR/LAYOUT NO: 239/2023 என எண்ணிடப்படுள்ளது.

Scanned with OKEN Scanner

ஊராட்சி பொதுநிதியில் செலுத்தப்பட்ட கட்டணங்கள் :-

- கூராய்வு கட்டணம் ரூ.1000/- (VP Tax)
- மனைப்பிரிவு அனுமதி கட்டணம் ரூ.51000/- (VP Tax)
- பராமரிப்பு பணிகளுக்கு வைப்புத்தொகை ரூ.319000/- (VP Tax)
- ஆய்வுக் கட்டணம் ரூ.1000/- (VP Tax)

பாலசமுத்திரம்புதூர் ஊராட்சி பொதுநிதி கணக்கு எண்ணிற்கு ரொக்கமாக நாள்:08.04.2024-ன்படி செலுத்தியுள்ளார்.

E-challan மூலம் செலுத்தப்பட்ட கட்டணங்கள் :-

- நில பயன்மாற்ற கட்டணம் ரூ.33495/- (E-challan)

மேலும் பார்வை 2-ல் காணும் அரசாணைகளின்படி, மனையிடத்தின் சந்தை மதிப்பு 3% தொகை பார்வை 4-ல் காணும் திருப்பூர் தொட்டிபாளையம் சார்பதிவாளர் அவர்களின் சந்தை மதிப்பீட்டின்படி அரசு கணக்கு எண்: 0217–60-800-AS-22709-ல் சாலன் நாள்: 08.04.2024-ன் படி இணைய வழி மூலம் அரசு தலைப்பில் செலுத்தியுள்ளார்.

எனவே, இணைப்பில் கண்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு வரைபட அங்கீகாரம் மற்றும் மனைப்பிரிவிற்கு இறுதி அனுமதி அளித்து உத்திரவிடப்படுகிறது.

நிபந்தனைகள்:

1. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருப்பூர் மண்டலம் அவர்களின் மனைப்பிரிவு SWP/DTCP/TIRUPPUR/LAYOUT NO: 239/2023 கோப்பு ந.க.எண்: 8EDF0NBZ/2023/TCP நாள்: 25.08.2023-ல் காணும் சுட்டிகாட்டிய அனைத்து மனைப்பிரிவு மற்றும் சிறப்பு நிபந்தனைகள் பின்பற்றப்பட வேண்டும்.
2. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அலுவலகம், திருப்பூர் மண்டலம் அவர்களின் செயல்முறை நடவடிக்கையின் படி வழங்கப்பட்ட SWP/DTCP/TIRUPPUR/LAYOUT NO: 239/2023 -ல் குறிப்பிட்டுள்ளவாறு எல்லைக்கற்களால் வரையறுக்கப்பட வேண்டும்.
3. மனைப்பிரிவு அனுமதி பெறும்போது செலுத்தப்பட்ட கட்டணம் தவிர வேறு ஏதாவது கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டுமென்று அறிவிப்பு கிடைத்தால் உரிமையாளர் ஏழு தினங்களுக்குள் குறிப்பிட்ட தொகையை செலுத்த வேண்டியது உரிமையாளருடைய பொறுப்பாகும்.

Scanned with OKEN Scanner

4. மேலே கண்ட நிபந்தனைகளில் ஏதாவது ஒன்று அல்லது அனைத்தும் மீறப்பட்டாலோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திலிருந்து மாறுபட்டோ மனைபிரிவு அமைக்கப்பட்டாலோ உரிமையாளர் விதிகளின்படி நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவதுடன் அபராதத்திற்கு உட்பட்டவராவர்.
5. இந்த மனைபிரிவு அனுமதி தவறான முறையில் பெறப்பட்டதாகவோ அல்லது தவறுதலுக்கு இடம் கொடுக்கக்கூடியதாகவோ இருக்கும் என செயல் அலுவலர் கருதும் பட்சத்தில் அல்லது அவருக்கு தோன்றும் உசிதமான காரணங்களை கொண்டும் இந்த மனைபிரிவு அனுமதியை இரத்து செய்வதற்கோ அல்லது மாற்றம் செய்வதற்கோ உட்பட்டதாகும்.
6. மேலே கண்ட நிபந்தனைகளில் எவையேனும் மீறப்பட்டால் அங்கீகாரம் இரத்து செய்யப்படும்.

D.Velumani
தலைவர் / செயல் அலுவலர்,
மாலசமுத்திரம்புதூர் கிராம ஊராட்சி.

இணைப்பு:

1. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அலுவலகம், திருப்பூர் மண்டலம் அவர்களின் செயல்முறை நடவடிக்கை படி,
2. மனைப்பிரிவு வரைபடம்.

பெறுநர்:

திரு.லோகநாதன்,
நெ.76, பழனியம்மாள் நகர், 3வது வீதி, நல்லூர்,
திருப்பூர்-641606.

நகல்:

1. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருப்பூர் மண்டலம்
2. உதவி இயக்குநர்(நிலஅளவை), மாவட்ட ஆட்சியர் அலுவலகம். திருப்பூர்
3. நகர் ஊரமைப்பு ஆ ணையர், 867,அண்ணாசாலை, சென்னை-600 002.
4. உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திருப்பூர் அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
5. வட்டாட்சியர், திருப்பூர்(தெற்கு) வட்டம், திருப்பூர் மாவட்டம்.
6. தொட்டிபாளையம் சார் பதிவாளர், திருப்பூர்

Scanned with OKEN Scanner